**மே - 18**

**"விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்"**

**- எபி 4 : 3.**

கர்த்தரிடத்தில் நமது நம்பிக்கை நிறைவாக இருக்கிறது போல அவரில் நமது இளைப்பாறுதலும் அப்படியே இருக்கிறது. பூரணமாக நம்புகிறவன் பூரணமாக இளைப்பாறுகிறான். குறைவாய் மாத்திரம் நம்புகிறவன் குறைவாய் மாத்திரம் இளைப்பாறுகிறான். ஆவிக்குரிய இஸ்ரவேலனின் உயர்வானநிலை என்னவென்றால், தன்னுடைய தற்கால அனுபவத்தில் பூரண இளைப்பாறுதலை, பூரணமான ஓய்வு ஆசரிப்பைப் பெற்று மற்றுமொரு இன்னும் அதிக நிறைவான இளைப்பாறுதலுக்காக, அதாவது பூரணமாக்கப்பட்ட நிலையின் உண்மையான இளைப்பாறுதலும், தேவனுடைய ஜனங்களுக்கு எஞ்சியிருக்கிறதுமான இளைப்பாறுதலுக்காக காத்துக் கொண்டும் பிரயாசப்பட்டுக்கொண்டும் இருப்பது. "ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினால் விழுந்து போகாதபடிக்கு (மாம்ச பிரகாரமான இஸ்ரவேலரைப் போல) நாம் இந்த இளைப்பாறுதலின் (ஓய்வில்) பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்க கடவோம் (கஷ்டப்பட்டு கிரியை செய்வோமாக)" எபி 4 : 9 - 11.

**- Z ’99, 253 (R 2534).**

யூதர்கள் ஓய்வு நாளில் வேலையிலிருந்து ஓய்வைப் பெற்றார்கள். அதில் தொழுது கொண்டார்கள். இந்த ஓய்வுநாள், சாபத்திலிருந்து ஓய்வும் தேவனுக்கு ஊழியமும் கொண்ட ஆயிரவருட ஓய்வுநாளை தகுந்தவிதமாக திருஷ்டாந்தப்படுத்துகிறது. நாம் நீதிமானாக்கப்பட்டிருக்கிற நிலை, நம்மை இப்பொழுது ஆயிரவருஷ ஆட்சியிலுள்ள இளைப்பாறுதலில், அதன் பூரணத்தில் இருக்கிறவர்களாக எண்ணப்பட செய்கிறது. இந்த சிலாக்கியம், கிறிஸ்துவின் முடிந்த வேலையில் விசுவாசத்தின் இளைப்பாறுதலைக் கொண்டவர்களாக இருக்க நம்மை சாத்தியமாக்குகிறது. தேவனுடைய ஜனங்களுக்காக மகிமையிலும், கனத்திலும், சாவாமையிலும் எஞ்சியிருக்கிற ஓய்வில் பிரவேசிக்க சாத்தியமாக்கப்பட, பிரதிஷ்டையில் நாம் மரணபரியந்தம் ஊக்கமாகப் பிரயாசப்படுகிறோம். **- P '33, 79.**

**ஒத்த வாக்கியங்கள்:-**

ஏசா 26:3; எபி 4:3-11; 3:14,18; மத் 11:28-30; யோவா 14:27; 16:33; 20:19; அப் 10:36; ரோம 2:10; 5:1; 14:17; 15:13,33; எபே 2:14-17; பிலி 4:7,9; கொலோ 1:20; 3:15; 2தெச 3:16.

**கோபுர வாசிப்பு : Z ’14, 104 (R 5433)**

**வினாக்கள்**: இந்த வாரத்தில் நான் விசுவாசத்தின் இளைப்பாறுதலை அனுபவித்தேனா? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது எது? அதன் விளைவு என்ன?